# 26 படிக்கும் போது மதிநுட்பங்கள்

**இலக்கு**

*படிப்புத் தகைமையை கூட்டுதற்கு, மாணவர்கள் முதலில் கடினமான சொற்களை அல்லது எழுத்துருப் பந்திகளை எவ்வாறு வேண்டுமென்றே மற்றும் நோக்கத்துடன் கையாள்வது என்பதை கற்றுப் பயிற்சிசெய்தல் வேண்டும். இரண்டாவதாக, ஒரு எழுத்துருவின் நடுவண் அல்லது திறவுக் கருத்துகள் பற்றிய விழிப்புணர்வை உயர்த்தவேண்டும் (முதன்மைச் சிக்கல்கள் என்ன, எழுத்துருவிலுள்ள திறவுக் கூற்றுக்கள் என்ன?).*

3ம் - 9ம் தரம் | 30 மணித்துளிகள்

**கருவிகள்:**
வகுப்பறைப் பாடநூல்கள், சிறுகதைகள், கற்பனை சாராத படைப்புக்கள், சஞ்சிகைகள். 2-3 வேறுபட்ட அகவை மற்றும் தகைமை மட்டங்களுக்குக் கருவிகள் உருவாக்கப்படவேண்டும்

**செயல்முறை:**

- எவ்வாறு எழுத்துருக் கடினங்களைக் கையகப்படுத்துவது மற்றும் எவ்வாறு முதன்மைக் குறிப்புகளை அடையாளங்காண்பது பற்றி ஒன்று அல்லது பல எடுத்துக்காட்டுகளுடன் ஆசிரியர்கள் எடுத்துக்காட்டுவர். ஆசிரியர் அதற்கு இணையான படிநிலைகளின் மாதிரியைச் செய்து காட்டி அவ்வாறு செய்யும்போது "உரத்து வெளியாக எண்ணினால்" இது சிறப்பானதாய் அமையும்.
- பின்வரும் இரண்டு படிநிலைகள் இச்செயற்பாட்டின் நடுநிலையாகும். இதை மாணவர்கள் எழுத்தில் பெற்றுக்கொள்வர் அல்லது கரும்பலகையிலிருந்து படியெடுப்பர்:
  - **கடினமான பந்திகளை அடையாளங்காணுதல்**, தெளிவாக்குதலும் விளங்கிக்கொள்ளுதலும்: தொடக்கப் படிப்பு, திரும்பப் படித்தல், எழுத்துரு, கலைக்களஞ்சியங்கள், அகரமுதலிகள், மற்றும் இணையத்தைப் பயன்படுத்தி விளக்கங்களைத் தனியாகத் தேடல்.
  - திறவுக் கூற்றுக்களை இனங்காணுதல், எழுத்துரையை கருத்தமைய பந்திகளாகப் பிரித்தல். கருத்தமைவிற்கு ஏற்ப பந்திகளுக்குத் தலைப்புகளைத் தேர்வு செய்தல்.




- மேற்குறிப்பிட்ட செயல்முறை அனைவராலும் புரிந்துகொள்ளப்பட்டால் மாணவர்கள் அவர்களது வயது அல்லது தகைமைகளுக்கு ஏற்ப பிறிதொரு எழுத்து விடயத்தைப் பெற்றுக்கொள்வர் (வயது உகந்ததாகவும் புலமை மட்டத்தில் வேறுபடுத்தப்பட்டதாகவும் மேற்குறிப்பிட்ட இரண்டு கூற்றுக்களுக்கும் அமைவாய் தாமாகவே ஒரு எழுத்து விடயத்தின் முக்கிய கூற்றை அடையாளங்காண்பர்). இவை தனித்தனியாகவோ அல்லது சோடியாகவோ மேற்கொள்ளப்படலாம்.
- இது சுருக்கமான விமர்சனம் மற்றும் இம்முறையினூடாக அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளல் ஆகியவற்றோடு நிறைவடையும்.

---

**குறிப்புகள்:**

- உண்மையில், இவ்வகையான பயிற்சிகள் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட வேண்டும். வேறுபட்ட படித்தற்கருவிகளோடு முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன் இவ் எண்ணக்கருவின் அடிப்படையில் மாணவர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

- பயிற்சிகள் 25-27 நெருங்கிய தொடர்பு கொண்டன என்பதை மாணவர்களுக்கு அறியப்படுத்துவதோடு எண்ணக்கருவின் அடிப்படையில் மாணவர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படவேண்டும்.
- மேலே விவரிக்கப்பட்ட படிமுறைகள் வாசிப்பு நுட்பங்கள் என்ற தலைப்பின் கீழ் பயிற்சித்தாள்களில் 25 மற்றும் 27 இலக்கங்களின் படிமுறைகளுடன் மேற்கொள்ளவேண்டும்
- முக்கிய கூற்றுக்களை விளங்கிக் கொள்வதற்கான உத்திகளும் நுட்பங்களும் தொகுதி 05 பாரம்பரிய மொழிக் கற்பித்தலுக்கான கற்றல் நுட்பங்கள் மற்றும் உத்திகளைக் கற்பித்தலில் காணமுடிகின்றது(05வது வெளியீடான பாரம்பரிய மொழிக் கற்பித்தலுக்கான கற்பித்தல் ஆலோசனைகள் எனும் நூலின் தொடர்ச்சியில் காணலாம்). "எழுத்து விடயத்தில் மிக முக்கிய விடயங்களை உருவாக்குதல்" 9ஐப் பார்க்கவும்).

# 27 படித்தலின் பின்னான மதிநுட்பங்கள்

**இலக்கு**

*முதலாவது, ஓர் எழுத்தாக்கத்தைப் படித்த பின் எவ்வாறு அதைச் சுருக்கமுடியும் என்பதை மாணவர்கள் முதலில் கற்க வேண்டும். எழுத்தாக்க வகையை அடிப்படையாகக் கொண்டு இதற்குப் பல பயனுடைய அணுகுமுறைகள் காணப்படுகின்றன. இரண்டாவதாக, எவ்வாறு கட்டற்ற முறையில் ஒரு கருத்தை உருவாக்கி விளங்கப்படுத்தி அதை நியாயப்படுத்தி எவ்வாறு கற்பது என்பதையும் எவ்வாறு அது தொடர்பாகப் பயிற்சியெடுப்பது என்பதையும் கற்றுக்கொள்ள வேண்டும்.*

3ம் - 9ம் தரம் | 30 மணித்துளிகள்

**கருவிகள்:**
வகுப்பறைப் பாடநூல்கள், சிறுகதைகள், கற்பனை சாராத படைப்புக்கள், சஞ்சிகைகள், 2-3 வேறுபட்ட அகவை மற்றும் தகைமை மட்டங்களுக்குக் கருவிகள் உருவாக்கப்படவேண்டும்

**செயல்முறை:**

- பல்வேறு வகையில் உள்ளடக்கத்தை எவ்வாறு சுருக்கமாகக் குறிப்பிடுவ தென்பதை ஆசிரியர் விளங்கப்படுத்தி செய்து காட்டுவார். இது வேறுபட்ட எழுத்தாக்கங்களுடன் பயிற்சி செய்யப்படும் (2-3 வெவ்வேறு மட்டங்களிலான எழுத்தாக்கங்கள் மற்றும் 2-3 வெவ்வேறு வகைகளிலான எழுத்தாக்கங்கள் இதற்குப் பயன்படுத்தப்படும் (எ.டு. புனைகதைகள் அல்லாதவை, வரலாறு மற்றும் பல). பின்னர் வகுப்பு முழுவதும் எழுத்தாக்கங்கள் பற்றிய கருத்துக்களை உருவாக்கி அவற்றை தாமாகவே தக்கவைப்பர். ஒரு உரையில் ஒருவரின் சொந்தக் கருத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயப்படுத்தல் ஆகியவை வகுப்பில் ஒன்றாக விவாதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.
- மாணவர்கள் கரும்பலகையிலிருந்து அல்லது எழுத்துப்படியாகப் பெற்றுக்கொள்ளும் பின்வரும் பயிற்சிக்குரிய செயன்முறையை எல்லோரும் ஒருமுறை விளங்கிக்கொள்ளும்போது பின்வரும் படிமுறைகள் பயன்படுத்தப்படும்:
  - **உள்ளடக்கத்தைச் சுருக்குதல்:** எழுத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வெவ்வேறு வடிவங்கள் பயனுடையனவாகும். எ.டு. விளக்கப்படம், காலத்தொடர்ச்சிப் பட்டியல்கள் / காலவரிசை, வகிபங்கு, மீண்டும் எடுத்துரைத்தல், வரைபு விவரிப்புக்கள், மற்றும் பல.
  - **ஓர் எழுத்தாக்கத்தை மதிப்பிடுதல்:** படித்த பின், பின்வருவன போன்ற வினாக்களுக்கு பதிலளிக்கப்பட வேண்டுமென்பதுடன் அவை கலந்துரையாடப்படவேண்டும்: எவ்வாறு இவ் எழுத்தாக்கத்தை விரும்பினீர்கள்?, எதை நீங்கள் ஆர்வமாகக் கருதினீர்கள், எது உங்களுக்குப் புதியதாக இருந்தது? இதன் பொருள் பற்றிய உங்கள் கருத்து யாது?, இதை யாருக்கு உங்களால் பரிந்துரைக்க முடியும்?
- அனைத்து மாணவர்களும் இவ் அணுகுமுறையை விளங்கிக்கொள்ளும்போது அவர்கள் பல்வேறு எழுததாக்கங்களைப் பெற்றுக்கொள்வார்கள் (அவர்களுடைய வயது மற்றும் தேர்ச்சி மட்டங்களுக்கு பொருத்தமாக). தனியாக அல்லது இணையாக மேலே குறிப்பிடப்பட்ட குறிப்புகளுக்கு அமைவாக அவர்கள் கருத்துக்களை தனியாக அல்லது இணையாக உருவாக்கவும் பயிற்சி செய்கின்றனர்.